# DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. DVC.No. 21 / 2023
Deposition of PW1

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. மகாலட்சுமி |
| Father's / Husband Name | : | சந்திரன் |
| Village | : | ஏத்தக்கோவில் |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | கூலி |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02.07.2026.
R1 Exparte, R2,R3 ஆஜர்.

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். நான் இந்த சாட்சியத்தை எனக்காவும் , என்னுடைய குழந்தைக்காக கூறிக்கொள்கிறேன். 1ம் எதிர் மனுதாரர் என் கணவர் ஆவார், 2 ம் எதிர் மனுதாரர் என் மாமனார் ஆவார். 3ம் எதிர் மனுதாரர் எனது மாமியார் ஆவார். நான் இந்த மனுவை குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை காக்கும் சட்டத்தின் படி பரிகாரங்கள் கேட்டு தாக்கல் செய்துள்ளளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விபரங்கள் என்னால் கூறப்பட்டவை . என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை முதன்மை சாட்சியமாக பாவிக்க வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 1 | **ம.சா.ஆ.1** | 30.11.2017 ம் தேதி எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமண அழைப்பிதழ் அசல் |
| 2 | **ம.சா.ஆ.2** | திருமணத்தின் போது எடுத்துக்கொண்ட புகைப்படம் – அசல் |
| 3 | **ம.சா.ஆ.3** | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை நகல் (Compared with Original) |
| 4 | **ம.சா.ஆ.4** | 03.05.2022– 1ம் எதிரிமனுதாரர் மீது மனுதாரர் ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதற்கு வழங்கப்பட்ட புகார் மனு ரசீது |

| | | |
|---|---|---|
| | | – அசல் |
| 5. | ம.சா.ஆ.5 | 03.04.2023 1ம் எதிரிமனுதாரர் மீது மனுதாரர் ஆண்டிபட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதற்கு வழங்கப்பட்ட புகார் மனு ரசீது – அசல் |
| 6 | ம.சா.ஆ.6 | 17.07.2023 மனுதாரர் தேனி மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அவர்களிடம் வழங்கிய புகார் மனு - நகல் (Compared with Original) |
| 7. | ம.சா.ஆ.7 | 1 ம் எதிர் மனுதாரருக்கு தந்தை வழிப்பாத்தியப்பட்ட பூர்வீக நிலத்தின் பட்டா - நகல் (Compared with Original) |
| 8. | ம.சா.ஆ.8 | 1 ம் எதிர் மனுதாரருக்கு தந்தை வழிப்பாத்தியப்பட்ட பூர்வீக நிலத்தின் வீட்டின் பத்திரம் - நகல் (Compared with Original) |
| 9. | ம.சா.ஆ.9 | 17.11.2018 குழந்தை ரித்திக்சன்மா பிறப்புச்சான்று – நகல் (Compared with Original) |
| 10. | ம.சா.ஆ.10 | 17.11.2018 குழந்தை ரித்திக்சன்மா ஆதார் அட்டை – நகல் (Compared with Original) |
| 11. | ம.சா.ஆ.11 | 1 ம் எதிர் மனுதாரரின் ஆதார் அட்டை - நகல் (Compared with Original) |

மனுவில் நான் கூறியுள்ள சங்கதிகள் , தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் ஆகியவற்றை பரிசீலனை செய்து நான் கோரும் பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

2,3 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –

1) நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நானும் 1ம் எதிர் மனுதாரரும் காதலித்து வந்தோம். எங்கள் காதலை எனது பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனது திருமணத்திற்கு முன்பாக 6 மாதத்திற்கு முன்பே நான் எதிர் மனுதாரர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அந்த சமயத்தில் 2,3 எதிர்மனுதாரர்கள் எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடத்திவைக்க பேச்சிவார்த்தை நடத்தியபோது தான் எனது பெற்றோர்கள் சம்மதம் தெரிவித்தார்கள். எனது திருமணத்தின் போது எனது பெற்றோர்கள் எனக்கு எத்தனை பவுன் தங்கநகைகள் போட்டார்கள் என்ற விபரம் 2,3 எதிர்மனுதாரர்களுக்கு தெரியாது என்றால் 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியும்.

2) 2ம் எதிர்மனுதாரருக்கு முகநூலை பற்றிய விபரம் எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். இந்த மனு தாக்கல் செய்யும் போது நான் 2,3 எதிர்மனுதாரர்களுடன் வசித்து வந்தேன் என்று சொன்னால் அது சரியல்ல. 1ம் எதிர் மனுதாரருக்கு தேனியை சேர்ந்த பூமிநாதன் அவர்களது மனைவியுடன் இருந்த தொடர்பு பற்றி நான் சொல்லித்தான் 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரின் தந்தை பெயர் பெரியண்ணன் என்றால் சரிதான். பெரியண்ணனின் தந்தை பெயர் சந்திரமூப்பர் ஆகும். சந்திரமூப்பருக்கு 2 பெண்கள் ,1 ஆண் வாரிசு ஆவார்கள். பெரியண்ணன் அவர்களுக்கு 2ம் எதிர்மனுதாரரை சேர்ந்து மொத்தம் 5 நபர்கள் உள்ளார் என்று சொன்னால் சரிதான்.

3) நான் தாக்கல் செய்துள்ள ExP.7 ஆவணத்தில் சொத்தின் பெயர் சந்திரமூப்பர் என்பவரின் பெயரில் உள்ளது என்று சொன்னால் தற்போது மாற்றம் செய்துள்ளார்கள். அவ்வாறு மாற்றாம் செய்யாததால் தான் நான் நீதிமன்றத்தில் அந்த ஆவணத்தினை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதலில் எனது கணவரை காணவில்லை என்று புகார் செய்ததின் அடிப்படையில் என் கணவர் மீண்டும் என்னுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு சேர்ந்து வாழ்ந்த நாட்களில் எனக்கும் 1ம் எதிர்மனுதாருக்கும் சண்டை ஏற்பட்டு நான் அவரை அறுவாள் கொண்டுதொடையில் வெட்டினேன் என்றால் அவர் தவறான வழியில் சென்றாதால் வெட்டினேன்.

4) நான் வெட்டியால் தான் என்னுடன் வாழமுடியாமல் ஓடிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. கடந்த 1 மாதத்திற்கு முன்பு இராயவேலூர்க்கு நானும் எனது மைனர் மகன், 2,3 எதிர்மனுதாரர்கள் திருவிழாவிற்கு சென்றோம். அங்கு வைத்து 1ம் எதிர்மனுதாரர் எனக்கு வீடியோ கால் செய்தார் என்று சொன்னால் சரியல்ல அவரது அம்மாவிற்கு தான் போண் செய்தார். கடந்த 1 வருடமாக நானும் எனது மகனும் புதியாதாக வீடு கட்டி நாங்கள் இருவர் மட்டும் குடியிருந்து வருகிறோம் என்று சொன்னால் அது என் அம்மா கட்டிக்கொடுத்த வீடாகும். 2ம் எதிர் மனுதாரரின் தந்தை எப்போது இறந்தார் என்றால் இந்த வருடம் ஜனவரி மாதம் இறந்தார். அந்த இறப்பு சடங்கிற்கு நானும் எனது மகனும், எனது பெற்றோர்களும்

கலந்துக்கொண்டோம் என்று சொன்னால் ஊர் பெரியோர்கள் சொன்னதால் கலந்துக்கொண்டோம்.

5) எனது கணவர் காணாமல் போய்விட்டார் என்பது தொடர்பாக 2ம் எதிர்மனுதாரரும் புகார் கொடுத்து அதற்கு ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் 1124/2023 என்ற எண்ணில் மனு ரசீது கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது காணாமல் போனது தொடர்பாக அனைத்து மகளிர் காவல் நிலையம் , ஆண்டிபட்டியில் நான் புகார் கொடுக்க சென்ற போது 2,3 எதிர்மனுதாரர்கள் என்னுடன் வந்தார்கள் என்று சொன்னால் ஒருமுறை மட்டும் வந்தார்கள். தற்போது எனது மகனை பள்ளியில் சேர்த்தற்கு 2,3 எதிர்மனுதாரர்கள் புத்தகப்பை வாங்கிகொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான். எனது மகனுக்கு ரூபாய் 3000 மதிப்பிலான சைக்கிள் எடுத்துக்கொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

6) எனது கணவர் காணாமல் போவதற்கு முன்பு எனது மகனுக்கு 2,3 எதிர்மனுதாரர்கள் அவனுக்கு மொட்டை எடுக்கும் போது 2 பவுன் தங்க செயின் அணுவித்தார்கள் என்று சொன்னால் சரிதான். 2,3 எதிர்மனுதாரர்கள் தற்போது வரை என்னை மகளாக பாவித்து வருகிறார்கள் என்று சொன்னால் தற்போது தான் மகளாக பார்க்கிறார்கள் 4 வருடமாக பார்க்கவில்லை. மனுவில் சொல்லியுள்ளது போல் 2,3 எதிர்மனுதாரர்கள் எந்த வகையிலும் என்னை தொந்தரவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுவில் 2,3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது கோபத்தின் காரணமாகதான் எனது கணவர் என்னை பிரிந்து சென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 2,3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எனது மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.07.02 16:44:54 +0530

Judicial Magistrate,
Andipatti.